# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2351 - 2023 සැප්තැම්බර් මස 22 වැනි සිකුරාදා 2023.09.22

*2351 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 898 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B82498 - 5,403(2023/09)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## மத்திய மாகாண சபையின் போக்குவரத்துத் திணைக்களம்

### தகுதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக தகுதிவாய்ந்த வாகனத்திருத்தங்களுக்கு (கராஜ்) அனுமதி வழங்குதல் - 2024

மத்திய மாகாணத்தில் பதிவு செய்துள்ள வர்த்தக வாகனங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கான தகுதிச்சான்றிதழ் வழங்குவதன் பொருட்டு, வியாபாரமொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் குறித்த வரி செலுத்தப்படுகின்றது என்பதற்கான சாட்சிகள் சமர்பிக்க முடியுமான வாகனத்திருத்தங்களின் உரிமையாளர்களிடமிருந்தும் இலங்கைப் போக்குவரத்து சபையின் கீழுள்ள டிப்போக்களிலிருந்தும் விண்ணப்பங்கள் கொரப்படுகின்றன. இதற்காக மத்திய மாகாணத்தினுள் அமைந்துள்ள வாகன திருத்தங்களிடமிருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

*i. வசதிகள் -*

(அ). 20 அடி நீளம், 2 1/2 அடி அகலம் மற்றும் 4 1/2 அடி ஆழமான வாகம் சோதனையிடும் கிடங்கு அல்லது அதற்கு சமமான வசதிகளைக் கொண்ட சோதனையிடும் மேடை அல்லது தூக்குக்கருவி

(ஆ). தடுப்புச் சோதனையிடும் உபகரணம்

(இ). பிரதான விளக்கினை சோதனையிடும் உபகரணம்

(ஈ). வாகனத்தின் கீழ்பகுதி, சக்கரத்திருப்பி, ஸ்டியரிங் மூட்டுகள் தடுப்புக்கருவி (பிரேக்), கம்பிவடங்கள் (கேபிள்) மற்றும் சிதைந்தபாகங்கள் என்பவற்றை சோதனையிடுவதற்காக பயன்படுத்தப்படும் திருப்புளி (ஸ்குரு), திருகிமுடுக்கும் கருவி (ஸ்பேனர்கள்) சுத்தியல் போன்ற இயந்திக்கருவிகள்.

*ii. சேவைக்குழாம் -*

சான்றுபடுத்தும் அலுவலர்களாக பின்வரும் தகுதிகளைக் கொண்ட நபர்கள் வாகனத்திருத்தங்களில் பணியில் அமர்த்தி இருத்தல் வேண்டும்.

(அ). மோட்டார் வாகன பொறியியல் விஞ்ஞானம் தொடர்பில் விசேட நிபுணத்துவம் பெற்றவர் அல்லது இயந்திர பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய தொழிநுட்ப டிப்ளோமா சான்றிதழ் அல்லது கனிஷ்ட தொழிநுட்பவியாளர் சான்றிதழ் பெற்று மோட்டார் வாகன பொறியியல் துறையில் 05 வருட அனுபவம் கொண்டவர்.

(ஆ). மொரட்டுவ இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவனத்தில் மோட்டார் வாகன இயக்கவியல் தொடர்பான நான்கு வருட கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து அதில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச்சமனான வேறு தகைமையுடன் மோட்டார் வாகனப்பொறியியல் துறையில் எட்டு வருட அனுபவம் கொண்டவர்

**02. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்பித்தல் வேண்டும்.**

(அ). சான்றுபடுத்தும் அலுவலரின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சான்று படுத்தப்பட்ட பிரதிகள்

(ஆ). மீள் செலுத்தப்படாத வைப்புத் தொகையான ரூபா 2000.00 இனை மத்திய மாகாண போக்குவரத்து ஆணையாளரின் 33965 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவுவைத்து பெறப்படும் பற்றுச்சீட்டு

(இ). பரிசோதனை அதிகாரி அணுகக்கூடிய வகையில் குறித்த வாகன திருத்தகம் அமைந்துள்ள அமைவிடத்தினை சரியாக குறிப்பிட்டு, நகரின் மையத்திலிருந்து அவ்விடத்தினை அணுகுவதற்கான பாதை வரைபடம் (பாதையின் விபரம் சுருக்கமாக குறிப்பிடவும்)

03. eRL 2.0 வேலைத்திட்டத்தின் கீழ் வாகன வருமான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது பயன்பாட்டு மென்பொருள் மூலம் நடாத்தப்படும் சோதனைகளின் விபரங்கள் மற்றும் புகைப்படங்கள் பதிவேற்றுவதற்காக ஸ்மார்ட் தொலைபேசி தேவைப்படுகின்றது. அதனால் 2024 ஆம் வருடத்தில் இருந்து தகுதிச்சான்றிதழ்கள் வழங்குவதற்கான வாகனத்திருத்திடங்கள் (கராஜ்) பதிவு செய்யும் போது ஸ்மார்ட் தொலைபேசி வைத்திருப்பது கட்டாயமாகக் கருதப்படுகிறது. உரிய விண்ணப்பப்படிவத்தினை அலுவலக வேலை நாட்களில் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**தகுதிச்சான்றிதழ்கள் வழங்குவதற்காக வாகனத்திருத்தகங்களைப் பதிவுசெய்தல் - 2024**" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு **போக்குவரத்து ஆணையாளர், போக்குவரத்து திணைக்களம், இலக்கம் 104, யடிநுவர வீதி, கண்டி என்ற முகவரிக்கு 2023.10.10 ஆம் திகதி** அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கககூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அந்த தேதிக்குப் பிறகு பெறப்படும் எந்த விண்ணப்பமும் பரிசீலிக்கப்படாது.

டீ. எம். பீ. எஸ். பி. தென்னகோன்,
போக்குவரத்து ஆணையாளர்,
போக்குவரத்து திணைக்களம்.
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண சபையின்,
போக்குவரத்துத் திணைக்களம்,
பி. ஒ. 104,
யடிநுவர வீதி,
கண்டி.
2023.08

09 - 323

---

**மேல் மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023 (கட்டம் II)**

மேல் மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரிய சேவையின் ஆசிரிய வெற்றிடங்களுக்காக மேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கமைவாக இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 3 தரம் 1 (அ) இற்கு இணைத்துக் கொள்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல பாடங்களுக்கான ஆட்சேர்ப்பு மாகாண அடிப்படையில் செய்யப்படுவதுடன் தற்போதுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் சேவை தேவைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு தொடர்பாக கிடைக்கப்பெறும் அனுமதிகளுக்குட்பட்டு 2025.12.31 வரையிலான வெற்றிடங்களுக்கு இப்போட்டிப் பரீட்சை ஏற்புடையதாகும். போட்டிப் பரீட்சையில் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்கள் மற்றும் செய்முறைப் பரீட்சையில் பெறப்பட்ட மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**02. சம்பள அளவுத்திட்டம்**

இப்பதவிக்குரிய மாதாந்த சம்பளம் 2022.01.05 ஆந் திகதி 03/2016(iv) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஜீ.ஈ-1-2016 ஆம் சம்பளத் தொகுதிக்கு உரியதாக ரூபா 31,490 – 6X445 – 7X525 – 2X600 – ரூபா 39,035 ஆகும். நீங்கள் இந்த சம்பளத் திட்டத்தின் 14 ஆவது படியான ரூபா 37,835 சம்பள நிலையில் அமர்த்தப்படுவீர்கள்.

**03. கல்வி மற்றும் வேறு தகைமைகள்**

3.1 கல்வித் தகைமைகள் :

i. விண்ணப்பத்தாரர்கள் கற்பித்தல் நோக்கங்களுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறப்புத் துறைகளைச் சேர்ந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டும். இப்பட்டம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்கு முன் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில் தாய் மொழி மற்றும் கணிதத்தில் சித்திகளோடு மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

மற்றும்

iii. கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*மிக முக்கியம் :* (விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை)

- விண்ணப்பதாரர்கள் தங்கள் பட்டத்திற்கு அமைவாக விண்ணப்பிக்கக்கூடிய பாடங்கள் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும்.
- ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டப்படிப்பில் பயின்ற முக்கிய பாடம் /பாடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- மூன்று பாடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பித்த பாடம் மற்றும் மொழியை எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்ற இடமளிக்கப்படமாட்டாது.

*3.2 உடல் மற்றும் உளத் தகுதிகள் :*

எல்லா விண்ணப்பதாரிகளும் ஆசிரியராக கடமையாற்றுவதற்கு உகந்த உடல் மற்றும் உள தகுதியுடன் இருத்தல் அவசியம்.

*3.3 வயது :*

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*3.4 வேறு தகுதிகள் :*

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் வேண்டும்.

iii. மேல் மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்ற இயலுமாயிருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரி அல்லது அவரது துணை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல் வேண்டும். (கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் ( டி.எஸ் 04) மூலம் நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

## 04. சேவை நிபந்தனைகள்

i. அரசாங்க/மாகாண அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், மேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அல்லது இதன் பின் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்குட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம்1(அ) இற்கு நியமிக்கப்படுவர்.

ii. இந் நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. பதவிக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனம் பெறுபவர்கள் கீழ்ப் படிதல் வேண்டும்.

iii. இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் 03 வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்டாக வேண்டும்.

iv. பதவியுயர்வுகள் மேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

v. 2020.10.16 ஆந் திகதி அ.நி.சு 18/2020 மற்றும் அவ்வப்போது அதில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு இணங்க பரிந்துரைக்கப்பட்ட இரண்டாவது அரசகரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும்.

## 05. ஆட்சேர்ப்பு

*5.1 ஆட்சேர்ப்பு முறை :*

2008.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் உள்ள மேல் மாகாண ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4 ஆம் பிரிவின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

தேர்வு செய்வதற்காக எழுத்து மூல போட்டிப் பரீட்சையொன்று நடைபெறும் .

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் அவர்கள் பெறும் புள்ளிகளின் தகைமை வரிசைப் படி ஒவ்வொரு பாடத்திற்கும் மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களின் மூன்று மடங்கினர் (03) பொதுவான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு அதில் தகுதி பெறுவோர் செயன் முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை மற்றும் செயல் முறைப் பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரர்கள், தற்போதுள்ள வெற்றிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் (ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 7.2.4.3.1 பிரிவு அதிகாரம் உடையதாகும் )

*5.2 எழுத்துப் பரீட்சை -*

*இந்த பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.*

| வினாத்தாள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக்குறைந்த புள்ளிகள். |
|---|---|---|
| 01. நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் - 01 மணித்தியாலம் ) | 100 | 40 |
| 02. பொது அறிவு (நேரம் - 01 மணித்தியாலம் ) | 100 | 40 |

பாடத்திட்டம் :

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை

விண்ணப்பத்தாரியின் ஆசிரிய தொழிலுக்குரிய திறமை, தர்க்கிக்கும் ஆற்றல் தொடர்பான அறிவை அளவிடுவதை நோக்காகக் கொண்டு இவ் வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் அவசியம்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

ஆசிரிய துறைக்குரிய , அத்துறை தொடர்பாக உள்ள பொது அறிவு மற்றும்/அல்லது தேசிய அளவில் நடைபெற்ற அல்லது நடைபெறும் கல்வித்துறையின் போக்குகள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயமாக்கல் தொடர்பான பொது அறிவினை பரீட்சிக்கும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

5.3 பரீட்சை நடைமுறை :

i. இப் பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும்.
ii. எல்லா விண்ணப்பதாரிகளும் அனைத்துப் பாடங்களுக்கும் குறிப்பிட்ட மொழியில் விடையளிக்க வேண்டும். அந்த மொழி மூலம் தாம் நியமனம் பெறவிருக்கும் மொழி மூலமாயிருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பதாரியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
iv. எல்லா விண்ணப்பதாரிகளும் இரு பாடங்களுக்கும் தோற்றுதல் அவசியமாகும்.
v. ஒரு தடவையில் இணைத்துக் கொள்ளும் எண்ணிக்கையானது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

5.4 பொது நேர்முகத் தேர்வு :

சேவைப் பிரமாணக் குறிப்பின் படி பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் அல்லது இணையத்தள விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைளைப் பூர்த்தி செய்துள்ளாரா என பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதியினைப் பரீட்சித்தல்.

5.5 செயன்முறைப் பரீட்சை முறை :

செயன்முறைப் பரீட்சையாக விண்ணப்பதாரி தன்னால் இனங்காணப்படும் ஒரு தலைப்பின் கீழ் செயல் முறை முன்வைப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். அதற்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| *தொடர் இல.* | *செயன்முறைப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நியமங்கள்* | *உச்ச புள்ளிகள்* | *சித்தி பெற தேவையான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | |

*5.6 செயன்முறைப் பரீட்சை முறை*

(i) செயன்முறைப் பரீட்சைக்காக (05) நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.
(ii) செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகூடிய புள்ளிகள் (25) ஆகும்.
(iii) செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியமங்கள் தொடர்பாகவும் ஆகக் குறைந்தது 02 புள்ளிகள் வீதம் பெறல் வேண்டும்.
(iv) செயன்முறைப் பரீட்சையின் மதிப்பீடு மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுச் சபையொன்றினால் மேற்கொள்ளப்படும்.

*5.7 நியமங்களின் குறிக்கோள்கள்*

(i) **குறிக்கோள் மற்றும் பிரவேசம்**
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப் பிரவேசம் செய்யும் திறமையினை மதிப்பிடல்.

(ii) **ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு**
ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலில் சிறப்பாக குரலினை உள்ள திறமையினை மதிப்பிடல்.

(iii) **தொடர்பாடல் தெளிவு**
கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்களை உற்பத்தித்திறனுள்ள முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல்.

(iv) **நேர முகாமைத்துவம்**
வழங்கப்படும் காலப்பகுதியினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல்.

(v) **முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு**
நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்ப முறைகளை சிறப்பாகப் பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல்.

**06. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக்கான கட்டணம் ரூ. 1200 ஆகும். இக்கட்டணத்தினை மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் மேல் மாகாண வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து பணமாகச் செலுத்தி தமது பெயரில் பெறப்பட்ட மே.மா.01 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

**மே.மா.01 பற்றுச் சீட்டின்** மூலப் பிரதியினைத் தவிர வேறு எந்தப் பற்றுச்சீட்டோ அல்லது முத்திரைகளோ அல்லது காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறான பற்றுச் சீட்டுக்களை முன்வைக்கும் விண்ணப்பத்தாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது, இப் பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படவோ,

வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ மாட்டாது. என்பதனை கருத்தில் கொள்ளவும். (பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்.)

**07. விண்ணப்பிக்கும் முறை :**

i. எல்லா விண்ணப்பத்தாரிகளும் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்திய பின்னர் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் நுழைந்து உரிய தகவல்களை வழங்கி விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் (submit) விண்ணப்பப் படிவத்தினை தரவிறக்கம் செய்யலாம். விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்யும் போது அட்டவணை 01 இனைப் பயன்படுத்துதல் வேண்டும்.

ii. நிகழ் நிலை மூலம் விண்ணப்பித்து, (online) பதிவிறக்கம் செய்யப்படாத விண்ணப்பங்கள் (download) மற்றும் கணினி மூலம் தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

iii. பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள், அடிப்படை தகுதிகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல்கள் எதுவுமின்றி நிராரிக்கப்படும். (விண்ணப்பத்தின் நிழற் பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுடையதாகும்).

iv. விண்ணப்பிக்கும் பாடத்தினை எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது ஒரு விண்ணப்பத்தாரி ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் தேவையற்ற வகையில் எந்தவொரு சான்றிதழையும் இணைத்து அனுப்புதல் தேவையற்றது. பணம் செலுத்திய பற்றுச் சீட்டினை மாத்திரம் ஒட்டி அனுப்ப வேண்டும். (இணைத்து அனுப்பக்கூடாது)

v. விண்ணப்பத்தாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் -

விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் விண்ணப்பத்தாரியின் கையொப்பம் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, அதிகாரமுள்ள அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ரூ. 498,960 இற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அரசாங்க மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர், பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி, மதகுருவாக கருதத்தக்க அளவிலான நிலையில் இருக்கும் ஒரு மதகுரு ஆகியோர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

தற்போது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்களின் ஒப்பம் உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவம் உரிய திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பப்பட வேண்டும்.

vi. நிகழ் நிலை (online) மூலம் விண்ணப்பிக்கக் கூடிய இறுதித் தினம் - 2023.10.09

vii. 2023.10.09 ஆந் திகதிக்கு முன்னர் நிகழ் நிலைமுறையின் மூலம் விண்ணப்பித்த பின்னர் பதிவிறக்கம் செய்யப்பட்ட குறிப்பு இலக்கம் (Reference number) கொண்ட விண்ணப்ப படிவங்களை விண்ணப்பத்தாரியின் கையொப்பத்துடன், கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின் 2023.10.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்,
மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு ,
இலக்கம். 628 ,10 ஆவது மாடி , ஜனஜய சிட்டி கட்டடம்,
நாவல வீதி , இராஜகிரிய.

விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண சபை ஆசிரிய சேவைக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல்-2023" எனவும், விண்ணப்பிக்கும் பாடத்தினையும் குறிப்பிட வேண்டும்.

08. தபாலில் தொலைந்த அல்லது கால தாமதமாகிய விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கருத்திற்கொள்ளப்படாது. காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்விதத்திலும் கருத்திற் கொள்ளப்படாது.

09. இவ் விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மற்றும் இப் பரீட்சையினைப் பிற்போடுதல் , இரத்துச்செய்தல் அல்லது நடைபெற்ற பின்னர் தேர்வு செய்தல்/செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

10. விண்ணப்பம் கிடைத்ததாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப் பட்டவுடன் அதை தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.wp.gov.lk என்னும் இணையத்தளத்தில் வெளியிடப்படும் அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 07 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அறவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது பற்றி மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்பிரதி, விண்ணபத்தினை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டுடன் உங்கள் முழுப்பெயர்,முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் பரீட்சையின் பெயர் ஆகியவற்றை சரியாக குறிப்பிட்டு மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் பரீட்சைகள் பிரிவில் வினவ வேண்டும்.

11. வர்த்தமானி அறிவித்தலின் படி தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதப்பட்டு விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய கட்டணத்தினை செலுத்தி விண்ணப்பத்தினை நிகழ்நிலை மூலம் அனுப்பி அச்சுப்பிரதியை பிழையின்றி நிரப்பி அனுப்பும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பமளித்தல் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படலாகாது. விண்ணப்பதாரி தகுதிகளைப் பூர்த்தி செய்யவில்லை எனத்தெரிய வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக்கான விண்ணப்பதாரி நிலையினை இரத்துச் செய்வதற்கும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிப்பதற்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

12. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கில சொற்களுக்கிடையே ஏதும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்களச் சொல்லே அதிகாரம் பெறும்.

13. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத் தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும், அவ்வாறில்லையாயின் எந்த வித அறிவித்தல்களுமின்றி நியமனம் இரத்துச் செய்யப்படும்.

### அட்டவணை 01

வெற்றிடமான பாடங்களும் மொழிமூலமும் கீழே காட்டப்பட்டுள்ளன அதற்கு இணங்க விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலமும் தெரிவு செய்யப்பட வேண்டும் .

| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | தகைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆரம்ப பிரிவு | √ | √ | x | முழுக் கற்கை நெறி காலத்திலும் சிங்களம்/தமிழ் மொழி அல்லது சிங்களம்/தமிழ் மொழியினை ஒரு முக்கிய பாடமாகப் பயின்ற கலை மானி பட்டம் |
| 2 | ஆங்கிலம் | √ | √ | √ | முழுக் கற்கை நெறி காலத்திலும் ஆங்கிலத்தை ஒரு முக்கிய பாடமாக கொண்ட பட்டம் அல்லது கலைமானி (ஆங்கிலம்) விசேட பட்டம் TESL (Teaching English as a second Language) அல்லது HND ஆங்கிலத்துடன் ஏதேனும் பட்டம் |
| 3 | நடனம் (தேசிய) | √ | √ | x | முழுக் கற்கை நெறி காலத்திலும் ஒரு முக்கிய பாடமாக நடனப் படாத்தினை உள்ளடக்கிய நுண்கலைமானி பட்டமொன்று/ அழகியற்கலை பட்டம் அல்லது கலைமானி விசேட ( நடனம் ) பட்டம் அல்லது அரங்கியற் கலைமானி (விசேட) பட்டமொன்று. |

| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | தகைமை |
|---|---|---|---|---|---|
| 4 | சங்கீதம் (கீழைத்தேய) | √ | √ | x | முழுக் கற்கை நெறி காலத்திலும் ஒரு முக்கிய பாடமாக கீழைத்தேய சங்கீதத்தினை உள்ளடக்கிய நுண்கலைமானி பட்டமொன்று/ அழகியற்கலை பட்டம் அல்லது கலைமானி விசேட (சங்கீதம் கீழைத்தேய) பட்டம் அல்லது அரங்கியற் கலைமானி (விசேட) பட்டமொன்று. |
| 5 | சங்கீதம் (மேலைத்தேய) | √ | √ | √ | முழுக் கற்கை நெறி காலத்திலும் ஒரு முக்கிய பாடமாக மேலத்தேய சங்கீதத்தினை உள்ளடக்கிய நுண்கலைமானி பட்டமொன்று/ அழகியற்கலை பட்டம் அல்லது கலைமானி விசேட (சங்கீதம் மேலைத்தேய) பட்டம் அல்லது அரங்கியற் கலைமானி (விசேட) பட்டமொன்று. |
| 6 | விஞ்ஞானம் | √ | √ | √ | உயிரியல்/இரசாயணவியல்/பௌதீகவியலை ஒரு முக்கிய பாடமாக கற்ற விஞ்ஞானமானி பொது அல்லது சிறப்புப் பட்டம் |
| 7 | சித்திரக் கலை | √ | √ | x | முழுக் கற்கை நெறி காலத்தில் ஒரு முக்கிய பாடமாக சித்திரக் கலை பாடத்திற்கு உட்படும் நுண்கலைமானி பட்டமொன்றைக் கொண்டிருத்தல்/ அழகியற் கலைப் பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் அல்லது கலைமானி விசேட(சித்திரம்) பட்டம். |
| 8 | கணிதம் | √ | √ | √ | தூய கணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதத்தை பிரதான பாடமாக கற்ற விஞ்ஞானமானி பொது அல்லது சிறப்பு பட்டம். |
| 9 | பௌத்தம் | √ | √ | x | முழுக் கற்கை நெறி காலத்திலும் பௌத்தம்/பௌத்த நாகரீகத்தை பிரதான பாடமாக கற்ற பொது கலைமானிப் பட்டம் |
| 10 | பௌத்த நாகரீகம் | √ | x | x | பௌத்த நாகரீகம், பௌத்த கலாசாரம், பௌத்த கல்வி, பௌத்த தத்துவங்கள் மற்றும் பாளி ஆகிய பாடங்களில் ஒரு பாடத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள பட்டமொன்று. |
| 11 | இந்து | x | √ | x | முழுக் கற்கை நெறி காலத்திலும் இந்து சமயத்தினை பிரதான பாடமொன்றாகக் கற்ற பொது கலைமானிப் பட்டம். |
| 12 | இந்து நாகரிகம் | x | √ | x | இந்து நாகரிகம், இந்து சமய பாடத்தில் பொது அல்லது சிறப்பு பட்டம். |
| 13 | இஸ்லாம் | √ | √ | √ | முழுக் கற்கை நெறி காலத்திலும் இஸ்லாமிய பாடத்தினைபிரதான பாடமொன்றாகக் கற்ற பொது கலைமானிப் பட்டம்.. |
| 14 | இஸ்லாமிய நாகரீகம் | x | √ | x | இஸ்லாமிய நாகரீகம், இஸ்லாம் சமயம் ஆகிய பாடங்களுடன் கூடிய சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 15 | ரோமன் கத்தோலிக்கம் | √ | √ | x | முழுக் கற்கை நெறி காலத்திலும் ரோமன் கத்தோலிக்கத்தை பிரதான பாடமொன்றாகக் கற்ற பொது கலைமானிப் பட்டம். |
| 16 | கிறிஸ்தவம் | √ | x | x | முழுக் கற்கை நெறி காலத்திலும் கிறிஸ்தவத்தை பிரதான பாடமொன்றாகக் கற்ற பொது கலைமானிப் பட்டம். |
| 17 | புவியியல் | √ | √ | √ | முழுக் கற்கை நெறி காலத்திலும் புவியியலை பிரதான பாடமொன்றாகக் கற்ற பொது கலைமானிப் பட்டம். |

| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | தகைமை |
|---|---|---|---|---|---|
| 18 | குடியுரிமை ஆய்வுகள் மற்றும் சமூக ஆளுகை | √ | √ | √ | முழுக் கற்கை நெறி காலத்திலும் குடியுரிமை ஆய்வுகள் மற்றும் சமூக ஆளுகை மற்றும் குடியியற் கல்வியை பிரதான பாடமொன்றாகக் கற்ற பொது கலைமானிப் பட்டம் அல்லது உளவியலில் (சிறப்பு ) பட்டம் |
| 19 | வணிகம் மற்றும் கணக்கீட்டுக் கல்வி | √ | √ | √ | வணிகவியல் இளமானிப் பட்டம் / வணிகத் துறை பாடப் பரப்பிற்குரிய விஞ்ஞான இளமானிப் பட்டம் / வணிகத் துறையில் முகாமைத்துவ பட்டம் /வணிக பாடத் துறையில் ஏதேனும் பட்டம். |
| 20 | முயற்சியாண்மைக் கல்வி | √ | x | x | |
| 21 | கொரியா மொழி | √ | x | x | கொரியா மொழியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண அல்லது விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| 22 | இரண்டாம் மொழி (தமிழ்) | √ | x | √ | முழுக் கற்கை நெறி காலத்திலும் பட்டப்படிப்பில் தமிழ்மொழியினை பிரதான பாடமாக சித்தி யெய்தியிருத்தல் அத்துடன் க.பொ.த (சா.த.) இல் சிங்கள மொழியை ஒரு பாடமாக கற்று ஆகக் குறைந்து திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது முழுக் கற்கை நெறி காலத்திலும் பட்டப்படிப்பில் தமிழ்மொழியினை பிரதான பாடமாக சித்தியெய்தியிருத்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகத்தில் அல்லது அரசின் சட்டரீதியிலான தாபனத்தில் 06 மாதங்களுக்குக் குறையாது சிங்கள மொழியில் டிப்ளோமா பயின்ற சான்றிதழினைப் பெற்றிருத்தல் . |
| 23 | இலக்கிய நயம் (சிங்களம்/தமிழ்/ ஆங்கிலம்) | √ | √ | √ | சிங்களம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது சிங்களத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டம் /தமிழ் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது தமிழை பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டம்/ஆங்கிலம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது ஆங்கிலத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டம் பெற்றிருத்தல் |
| 24 | இலக்கிய நயம் (அரபு | x | √ | x | அரபு மொழி தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது அரபு மொழியை பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைக் கொண்டிருத்தல். |
| 25 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | √ | √ | √ | முழுக் கற்கை நெறி காலத்திலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள தகவல் தொழில்நுட்பத்தைக் கொண்ட பட்டம் (IT), கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டம் (Bsc.Computer Science) |
| 26 | நீரியல் வளங்கள் தொழில் நுட்பவியல் | √ | x | x | விவசாயம் தொடர்பான ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டம் அல்லது கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளங்கள் தொடர்பான விஞ்ஞானமானி பட்டமொன்று அல்லது நீரியல் வள முகாமைத்துவம் மற்றும் கால்நடை விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றின் மொத்தப் பாடத் தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதி நீரியல் வளங்கள் தொழில்நுட்பப் பாடங்களாக இருத்தல். |

| | | *சிங்களம்* | *தமிழ்* | *ஆங்கிலம்* | *தகைமை* |
|---|---|---|---|---|---|
| 27 | கைத்திறன் கலை | √ | x | x | கட்புலக் கலை விசேட பட்டம் (சித்திரம், சிற்பம், அச்சுக் கலை மற்றும் ஜவுளி மற்றும் ஜவுளி சார்ந்த கலைகள் போன்றன) அல்லது கட்புலக் கலை மற்றும் திட்டமிடல் விசேட பட்டம் (சித்திரக் கலை மற்றும் கிரபிக்) அல்லது கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலை விசேட பட்டம் அல்லது கலைமானி அல்லது நுண்கலைமானி விசேட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் (சித்திரக் கலை/ கிரபிக்/ சிற்பக் கலை/ கட்புல மற்றும் தொழில்நுட்பக் கலை ஆகிய பாடங்கள் அல்லது ஒரு பாடத்தையேனும் பிரதான பாடமொன்றாக தொடர்ந்திருத்தல். |
| 28 | மனைப் பொருளியல் | √ | √ | x | மனைப் பொருளியல் தொடர்பாக க.பொ.த. சாதாரண தரத்தில் A சித்தியைப் பெற்றிருத்தல். அல்லது க.பொ.த. உயர் தரத்தில் மனைப் பொருளியல் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் அத்துடன் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரி அல்லது மனைப் பொருளியலுக்கான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தொழிற்கல்வி நிறுவனத்தில் ஓராண்டுக்கு குறையாத படிப்பை முடித்து டிப்ளமோ அல்லது சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு துறையிலும் பட்டதாரி அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர்கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் மனைப்பொருளியல் பட்டதாரி. |
| 29 | செயன்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் | √ | √ | x | க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞானம், கணிதம், தொழில் நுட்பவியல் பாடத் துறையில் ஆகக் குறைந்தது 03 பாடங்களிலேனும் சித்தியடைந்திருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படக்கூடிய பல்கலைக்கழக மொன்றின் ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டதாரியாக இருத்தல் |
| 30 | நிர்மாணம் மற்றும் தொழில்நுட்பம் | √ | x | x | உரிய பாடத் துறையில் தொழில்நுட்பமானி/பொறியியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் பட்டப் பாடநெறியின் உள்ளடக்கங்களில் ஆகக் குறைந்தது 1/3 பகுதி இப் பாடம் சார்ந்ததாக இருத்தல் அல்லது தேசிய தொழில்நுட்ப சான்றிதழ், தேசிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்துள்ள நிறுவனமொன்றில் அதற்கு சமனான ஒரு வருடத்திற்கு குறையாத பாடம் சார் தொழில்நுட்ப துறைக்குரிய பாடநெறியொன்றைத் தொடர்ந்து அதற்குரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படக் கூடிய பல்கலைக்கழக மொன்றில் எந்தவொரு பாடத்துறையிலேனும் பட்டதாரியாக இருத்தல். |

| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | தகைமை |
|---|---|---|---|---|---|
| 31 | சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | √ | √ | √ | விஞ்ஞானமானி (உடற் கல்வி) கௌரவ பட்டம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி கௌரவ பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 32 | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி | √ | √ | x | தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வி தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது தொடர்பாடல் மற்றும் ஊடகக் கல்வியைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 33 | கணக்கீடு | √ | √ | √ | கணக்கீடு தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது கணக்கீட்டினைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள ஏதேனுமொரு பட்டமொன்றைப் பெற்றிருத்தல் |
| 34 | வணிகக் கல்வி | √ | √ | √ | வணிகக் கல்வி மற்றும் வியாபார முகாமைத்துவத்திற் குரிய பாடங்களை பிரதான பாடமாகக் கொண்டுள்ள ஏதேனுமொரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 35 | வணிக புள்ளி விபரவியல் | √ | x | x | வணிகப் புள்ளிவிபரவியலைப் பிரதானமான பாடமொன்றாக அல்லது புள்ளிவிபரவியல் பாடத்தைக் கொண்டுள்ள வேறு ஏதேனுமொரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 36 | அளவையியலும் விஞ்ஞான முறையும் | x | √ | x | அளவையியல் மற்றும் விஞ்ஞான முறை தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது அளவையியல் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது அளவையியல் மற்றும் விஞ்ஞான முறையை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 37 | பொருளியல் | √ | √ | √ | பொருளியல் தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது பொருளியலை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள வேறு ஏதேனுமொரு பட்டத்தைப் பெற்றிருத்தல். |
| 38 | அரசியல் விஞ்ஞானம் | √ | √ | √ | அரசியல் விஞ்ஞானம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டமொன்று அல்லது அரசியல் விஞ்ஞானத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள வேறு ஏதேனுமொரு கலைமானி (சாதாரண) பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 39 | மோட்டார் எந்திரவியவில் | √ | x | x | மோட்டார் எந்திரவியலை பிரதான பாடமாக பயின்ற பட்டம் அல்லது மோட்டார் எந்திரவியலை பிரதான பாடமாக பயின்ற விஞ்ஞானமானி பட்டம் |
| 40 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி | x | √ | x | பட்டப்படிப்புக்காகப் படித்த மொத்தப் பாடங்களில் குறைந்தபட்சம் 1/3 சம்பந்தப்பட்ட பாடங்களை பூரணப்படுத்தியிருக்கும் பட்டம் |
| 41 | நூலகம் | √ | √ | x | நூலக அறிவியலில் கலைமானி (சிறப்பு) பட்டம் அல்லது நூலக அறிவியலை முக்கிய பாடமாகக் கொண்ட ஏதேனும் கலைமானி (பொது) பட்டம் பெற்றிருத்தல் . |

| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | தகைமை |
|---|---|---|---|---|---|
| 42 | மாணவர் ஆலோசனை | √ | √ | √ | உளவியல்/ சமூக விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உளவியல்/சமூக விஞ்ஞானம் தொடர்பான சாதாரண பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது ஏதேனுமொரு பட்டத்துடன்<br><br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றில் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட ஆலோசனை தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாத ஆலோசனை தொடர்பான டிப்ளோமா பாடநெறியொன்றைப் பெற்றிருத்தல் அல்லது<br><br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமளிக்கும் நிறுவனம் ஒன்றில் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட ஆலோசனை தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாத ஆலோசனை தொடர்பான பட்டப் பின் டிப்ளோமா பாடநெறியொன்றைப் பெற்றிருத்தல். |
| 43 | சிங்களம் | √ | x | x | முழுக் கற்கை நெறிக் காலத்தினுள் சிங்களத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 44 | சிங்கள மொழியும் இலக்கியமும் | √ | x | x | முழுக் கற்கை நெறிக் காலத்தினுள் சிங்களத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானிபட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 45 | தமிழ் மொழியும் இலக்கியமும் | x | √ | x | முழுக் கற்கை நெறிக் காலத்தினுள் தமிழைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 46 | தமிழ் | x | √ | x | முழுக் கற்கை நெறிக் காலத்தினுள் தமிழைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு கலைமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 47 | வரலாறு | x | √ | x | முழுக் கற்கை நெறிக் காலத்தினுள் படிப்பின் போது வரலாற்றை ஒரு முக்கிய பாடமாகக் கொண்ட கலைமானிப் பட்டம். |
| 48 | வரலாறு (இந்திய/ ஐரோப்பிய/தற்கால) | √ | √ | x | முழுக் கற்கை நெறிக் காலத்தினுள் வரலாற்றை ஒரு முக்கிய பாடமாகக் கொண்ட கலைமானிப் பட்டம். |

திலக் சேனரத்,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு (மே.மா).

மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்,
2023, செத்தெம்பர் 22.

மாதிரி விண்ணப்பம்

(இலக்கம்)

**மேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல இலங்கை ஆசிரிய சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023 (கட்டம் II)**

Competitive Examination for the recruitment of Graduates to the Grade I (a) in Class 3 of Sri Lanka Teachers' Service for Sinhala, Tamil and English Medium Vacancies in Western Provincial Schools - 2023 (Stage II)

1. மொழி மூலம் : .........................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ....................................................................................

3. பிறந்த திகதி : ........................................ வயது (2023.10.09 ஆந் திகதியில்) : .........................................

4. நிரந்தர வதிவிட மாவட்டம் :
(நிரந்தர வதிவிட மாவட்டம் பரீட்சைக்குத் தோற்றும் மாவட்டமாகக் கருதப்படும்)

5. 2023.10.09 ஆந் திகதியில் மேல் மாகாணத்தில் தொடர்ச்சியாக வசிக்கும் காலம் :

வருடம் : ............................. மாதம் : ............................. நாள் : .............................

6. பிரதேச செயலாளர் பிரிவு :

7. பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் : மே. மா. :

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை கழன்றுவிடாதவாறு இங்கு ஒட்டவும் : |
|---|

8. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

..................................................................................................................................................................................

8.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :

..................................................................................................................................................................................

8.2. முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) திரு. /திருமதி/செல்வி :

..................................................................................................................................................................................

8.3. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில் ) :

..................................................................................................................................................................................

9. விண்ணப்பிக்கும் பாடத்திற்கான அட்டவணை 01 இன் படி அதிகபட்சம் 03 பாடங்களை குறிப்பிடுக :
9.1.

| இல. | பாட குறியீட்டு இலக்கம் | விடயம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |

10. விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி : ..................................................................................................................

10.1. பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ..................................................................................

11. தகவல்களைத் தெரிவிப்பதற்கான கையடக்க தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

12. மின்னஞ்சல் முகவரி : ...................................................................................

13. கல்வித்தகைமை : க.பொ.த. (சாதாரண தர) பெறுபேறுகள் :

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை

வருடம் .......................................... சுட்டெண்............................................

வருடம் .......................................... சுட்டெண்............................................

| பாடம் | பெற்றுக் கொண்ட தரம் | வருடம் | பாடம் | பெற்றுக் கொண்ட தரம் | வருடம் |
|---|---|---|---|---|---|
| 01. | | | 06. | | |
| 02. | | | 07. | | |
| 03. | | | 08. | | |
| 04. | | | 09. | | |
| 05. | | | 10. | | |

14. கல்விப் பொது தராதர (உயர் தர) பெறுபேறுகள்:

வருடம் ............................. சுட்டெண் .............................

| பாடம் | பெற்றுக் கொண்ட தரம் |
|---|---|
| 01. | |
| 02. | |
| 03. | |
| 04. | |

15. உயர் கல்வித் தகுதிகள் பற்றிய தகவல்கள்

15.1 பட்டம் : ..........................................................................................................

15.2. வழங்கிய பல்கலைக்கழகம் : ..........................................................................................

15.3 பட்டச்சான்றிதழின் நடைமுறைத் திகதி : ......................................................................

15.4 பட்டப்படிப்பில் பயின்ற பிரதான பாடங்கள் : .............................

15.5 பட்டம் பெற்ற மொழி மூலம் : ............................................................

....................................................................................................................................................
(கீழ் வரும் பந்திகளுக்கான விபரங்கள் விண்ணப்பத்தாரி தனது கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்)

16. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ள போது விண்ணப்பிப்பவராயின்,

16.1 தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................................................................

16.2 அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி : ..........................................................................................................................

16.3 திணைக்களத் தலைவரின் உத்தியோபூர்வ பெயர் : ..........................................................................................................

16.4 சேவையாற்றும் தாபனம் : ...................................................................................................................................

16.5 தாபன முகவரி : ..................................................................................................................................................

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை என தெரிவிக்கிறேன். நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தகுதியற்றவர் என தெரியவருமிடத்து நியமனம் செல்லுபடியற்றதாக்கப்படும் என நான் அறிவேன். இங்கு குறிப்பிடப்பட்ட எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன் எனவும் தெரியப்படுத்துகிறேன்.

முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................................................

முகவரி : ..............................................................................................................................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம் : ..................................

திகதி : ................................

**17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ............................................................................................. என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், அவர் ..................................திகதி எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

திகதி .................................. ..........................................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் ஒப்பம்

அத்தாட்சிப்படுத்தும் அலுவலகரின் பெயர் : ................................................

பதவி : . ..................................

முகவரி : ..................................
(உத்தியோபூர்வ முத்திரை)

**18. விண்ணப்பதாரி அரசாங்க அலுவலராயின் நிறுவனத் தலைவரின் அத்தாட்சி**

திரு./ திருமதி/ செல்வி.................................................................................................... அவர்களின் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கிறேன். அவர் இவ்வமைச்சில்/இத்திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/அமைய ஊழியராக கடமையாற்றுகிறார் எனவும், இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரியப்படுத்துகிறேன்.

..............................................................
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் ஒப்பம்

திகதி .........................................

பதவி .........................................

அமைச்சு / திணைக்களம் .........................................
(உத்தியோகபூர்வ முத்திரையால் உறுதிப்படுத்துங்கள்)

09 - 464